2. அரசினர் தீர்மானங்கள்

(அ) பேரவை விதிகள் 185 (2) மற்றும் 190-ஐத் தளர்த்துதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அரசினர் தீர்மானம். பேரவை விதி 185 (2) மற்றும் விதி 190-ஐ தளர்த்தக் கோரும் தீர்மானம். மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"பேரவை விதிகள் 185 (2) மற்றும் 190-ஐ தளர்த்தி இன்று 12-11-2008 அரசினர் அலுவல்கள் எடுத்துக்கொள்ளப்பெறவேண்டும்"

என்னும் தீர்மானத்தை மொழிகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

(ஆ) இலங்கையில் தமிழர் பகுதிகளில் போர் நிறுத்தம் மேற்கொள்ள மத்திய அரசுமூலம் இலங்கை அரசை வலியுறுத்துதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அரசினர் தீர்மானம். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தம் தீர்மானத்தை முன்மொழியலாம்.

***மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பின்வரும் தீர்மானத்தை இந்த அவையின் ஒப்புதலுக்காக முன்மொழிகிறேன்:

"ஏறத்தாழ நாற்பதாண்டு காலத்திற்கு மேலாக இலங்கைத் தமிழர்களின் பிரச்சினை, பல்வேறு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டும் முடிவுக்கு வாராமல், அந்த மண்ணின் மைந்தர்களாம் தமிழின மக்களின் உயிர், உடைமைகள் எதற்கும் உத்தரவாதமில்லாமல், அவர்களின் குடும்பங்கள், குழந்தை குட்டிகள் என இலட்சக்கணக்கானோர் அகதிகளாக அயல்நாடுகளுக்கு ஓடியவர்கள் போக எஞ்சியிருப்போர்,